மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எம் 1) துறை

**செய்தி வெளியீடு :648–(31–07–2010)**

23.07.2010 அன்று மருந்து ஆய்வாளர்கள் குழு சென்னை கோட்டுர்புரம் வீட்டு வசதி வாரியம் காலனியில் உள்ள சூர்யா மெடிகல்ஸில் தீடீர் ஆய்வு செய்தபோது விற்பனைக்காக வைக்கப்பட்ட மருந்துகளோடு காலாவதியான மருந்துகளும் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. பதிவு பெற்ற மருத்துவர்களின் சீட்டு இல்லாமலும், மருந்தாளுநர் மேற்பார்வை இல்லாமல், மருந்துகளை விற்பனை செய்ததும், மருந்துகளின் முகப்புச் சீட்டில் சில மாற்றம் செய்து விற்றதும் கண்டுபிடிக்கப்பட்டது. காலாவதியான மருந்துகள் பறிமுதல் செய்யப்பட்டு, சைதாப்பேட்டையில் நான்காவது மாநகர நீதிமன்றத்தில் ஒப்படைத்து ஆணை பெறப்பட்டது. மேலும் இது குறித்து புலனாய்வு நடைபெற்று வருகிறது.

திருப்பூரில், கருகலைப்பு மாத்திரைகள் மருத்துவரின் சீட்டு இல்லாமல் விற்பனை செய்வதாக 24.07.2010 அன்று டெக்கான் கிரானிக்கல் செய்திதாளில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. MT pill மாத்திரைகள் மற்றும் தேவையில்லா மாத்திரைகளை வைத்திருந்த கடைகளை கண்டறிந்து 17 மருந்து கடைகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வில் 16 கடைகள் மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் சட்டத்தை மீறி மருத்துவர்களின் மருந்துச் சீட்டு இல்லாமல் இம்மருந்துகளை விற்றது கண்டறியப்பட்டது. மருந்து மற்றும் அழகு சாதனப் பொருட்கள் சட்டத்தின் கீழ் திருப்பூர் நகரில் உள்ள குட்டி மெடிக்கல்ஸ், பாவா மெடிக்கல் மார்ட், கீதா மெடிக்கல் ஸ்டோர், ஆனந்தா டிபார்ட்மென்டல் ஸ்டோர், அரசு மெடிக்கல்ஸ், ராஜா மெடிக்கல்ஸ், ஜிவா மெடிக்கல்ஸ், ஸ்ரீ கங்கா மெடிக்கல்ஸ், ஜெய் மெடிக்கல்ஸ்,ஸ்ரீனிவாசா மெடிக்கல்ஸ்,ஸ்ரீபதி மெடிக்கல்ஸ், ஆனந்தா பார்மஸி, நியூ அழகு பார்மஸி, ஸ்ரீ திருப்பதி மெடிக்கல்ஸ்,ஸ்ரீ சிவம் பார்மஸி மற்றும் பாரதி மெடிக்கல்ஸ் ஆகிய 16 மருந்துகடைகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

“மருத்துவர் மாதிரிகள் விற்பனைக்கல்ல” என மருந்து உற்பத்தியாளரால் வழங்கப்படும் மருந்துகளை, மருந்து நிறுவன பிரதிநிதி ஒருவர்விற்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில், மருந்தாய்வாளர் குழு ஒன்று வான்கார்டு தொரபெடிக்ஸ், ஹைதராபாத் என்ற நிறுவனத்தைச் சார்ந்த திரு. டி. சரவணன் என்பவருடைய எஸ். ஆர். பி. காலனி, சென்னை–82–ல் உள்ள இல்லத்தில் ஆய்வு மேற்கொண்டது. இவ்வாய்வின் போது பல்வேறு மருந்து தயாரிப்பு நிறுவனங்களுடைய “மருத்துவர் மாதிரிகள் – விற்பனைக்கல்ல” என்று உள்ள மருந்துகளை பெருமளவில் இருப்பில் வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இது குறித்த கணக்கும், பதிவேடுகளும் வைத்திருக்கவில்லை. எனவே, மருந்தாய்வாளர்கள் அவருடைய இல்லத்திலிருந்து மருந்துகளை பறிமுதல் செய்து, எழும்பூர் மாநகர நீதிமன்றம், அவர்களிடம் சமர்பித்து மருந்துகளை தகுந்த பாதுகாப்பில் வைப்பதற்கு ஆணை பெறப்பட்டது. இந்த மருந்துகளின் மதிப்பு சுமார் ரூ.2,00,000/– (ரூபாய் இரண்டு இலட்சம்) ஆகும். மேலும் விசாரனை நடந்து வருகின்றது.

மருந்து கட்டுப்பாடு இயக்ககம் ஏப்ரல் 2010 முதல் இதுவரை 61 நிறுவனங்கள் மீது வழக்கு தொடர அனுமதி வழங்கி உள்ளது. 32 வழக்குகளில் நிதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டு மொத்தம் ரூ. 4,51,000/– அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்
மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்

**வெளியீடு:**
இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை தலைமைச் செயலகம், சென்னை-9